ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

**शत्रौ मित्रे पुत्रे बन्धौ मा कुरु यत्नं विग्रहसन्धौ ।**
**भव समचित्तस्सर्वत्र त्वं वांछस्याचिरात् यदि विष्णुत्वम् ॥**

**शत्रौ** - சத்துருவினிடத்திலும்
**मित्रे** - ஸ்நேஹிதனிடத்திலும்
**पुत्रे** - பிள்ளையினிடத்திலும்
**बन्धौ** - பந்துக்களிடத்திலும்
**विग्रहसन्धौ** - விரோதம்செய்து கொள்ள வேண்டுமென்றாவது ஸ்நேஹம்வேண்டுமென்றாவது
**यत्नं** - முயற்சியை
**माकुरु** - செய்யாதே
**अचिरात्** - சீக்கிரமாக
**विष्णुत्वं** - பரமாத்மஸ்வரூபப்பிராப்தியை
**वांछसियदि** - இச்சித்தாயானால்
**सर्वत्र** - எல்லோரிடமும்
**त्वं** - நீ
**समचित्तः**- பேதபுத்தியில்லாமல்
**भव** - இருக்கவேண்டும்.

ஒரு பெரியார் தம்மையடைந்திருக்கும் சிஷ்யனுக்கு ஸம்ஸாரபங்கத்திலிருந்தும் விலகி உத்தமமான ஞானத்தைப் பெறவேண்டியதற்குற்ற ஸாதனத்தையறிவிக்கிறார்.

சத்துரு, மித்திரன் பந்து என்று சொல்லப்படும் ஜனங்களிடம் சத்துருவிடம் த்வேஷபுத்தியும், புத்திரன்முதலானவர்களிடம் அபிமானமும் ஏற்படவேண்டியதற்குள்ள பிரயத்தினத்தை நீ செய்யக்கூடாது. இவ்விதம் நீ பேதபுத்தியை வைத்துக்கொண்டிருந்தலால் பகவத்ஸ்வரூபாவாப்தியைப் பெறமுடியாது. ஸம்ஸாரதுக்கத்தை அடியோடு போக்கடித்துப் பூர்ணமான பகவதனுக்கிரகத்தைப் பெறவேண்டுமென்கிற விருப்பம் இருப்பின் சத்துரு மித்திரன் என்கிற எண்ணத்தைத் தூர விலக்கிவிட்டு எல்லா ஜனங்களிடமும் வித்தியாஸமில்லாமல் ஸமானபுத்தியுடனிருக்க வேண்டும். அப்பொழுது தான் உன் இஷ்ட பூர்த்தி ஏற்படும்.

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

க்ஷய௵ கார்த்திகை-மீ ௧௭உ


## சிரத்தானந்தர்கூறிய விதவாவிவாகத்திற்குக்கண்டனம்.

(௫௪௫-வது பக்கத்தொடர்ச்சி.)

**अनुष्ठितं च यद्देवैर्मुनिभिर्यदनुष्ठितम् ।**
**नानुष्ठेयं मनुष्यैस्तदुक्तं कर्म समाचरेत् ॥**

தேவர்களால் அனுஷ்டிக்கப்பட்டதையும் முனிகளால் அனுஷ்டிக்கப்பட்டதையும் ஸாமான்ய மனிதன் அனுஷ்டிக்கக் கூடாது. இவனுக்கு எதை அனுஷ்டிக்கும்படி சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றதோ அதைத் தான் அனுஷ்டிக்கவேண்டுமென்று போதாயனர் சொல்லியிருக்கிறார். ஒரு ஸமயம் அதர்மத்தைச் செய்தாலும் அதினாலேற்படும் பாபத்தைப் போக்கக்கூடிய பரிஹாரத்தை விதிப்படி செய்ய சக்திபொருந்திய மஹான்களான அர்ஜுனன் போன்றவர்களுடைய சாஸ்திரவிரோதமான அனுஷ்டானத்தைத் திருஷ்டாந்தமாகக்காட்டி நாமும் அவ்விதம் அனுஷ்டிக்க முயலுவது மிகவும் தவறேயாகும். இந்த பாரதவசனமே அர்ஜுனன் செய்தது சரியான விவாகமில்லை என்றும், அவனுக்குப் புத்திரனும் பரக்ஷேத்திரத்தில் ஜனித்த தோஷமுள்ள புத்திரன் என்றும் நன்கு போதிக்கும் பொழுது விதவாவிவாகம் செய்யலாமென்பதற்கு இந்த வசனத்தைப்பிரமாணமாகக்காட்டியிருப்பதைக் கொண்டு நம் சிரத்தானந்தருக்கு தர்ம சாஸ்திரத்தில் சிறந்த ஞானமிருக்கிறதென்று நன்றாய்த் தெரிகின்றது.

இதற்குப் பிறகும் புரட்டாசி௴ 5உ வெளிவந்த மித்திரனில் விதவாவிவாஹத்தை உலகில்நன்குபயிலச்செய்யவேண்டி மற்றும் சில வசனங்களுக்குத் தமக்குத்தோன்றிய ஆபாஸமான கருத்தை வெளியிட்டு இதினாலும் விதவாவிவாகம் அவசியம் செய்யலாமென்று ஆக்கிரகத்துடன் பேசியிருக்கிறார். இதுவரையில்

கூறிய விஷயங்களாலேயே அதற்கும் விடை ஏற்படலாம், ஆனாலும், அதையும் சுருக்கமாக அனுவாதம் செய்து, அதிலுள்ள தப்பான அர்த்தத்தையும் சிலருக்கு அறிவிக்கவேண்டியது அவச்யமெனக்கருதி அதையும் விசாரிக்க முன்வருகிறேன்.

புருஷனை இழந்த பெண்கள் யாரை மணப்பதென்று அவர்களே தீர்மானிக்கக் கூடும். தகப்பனார் முறையில் எந்த மதிப்பு வாய்ந்த கனவானும் அந்தப் பெண்ணை விவாஹம்செய்து கொடுக்கலாம். வேதத்திலும் 'இயம் நாரீபதிலோகம்' என்கிற மந்திரத்தில் அப்படிப்பட்ட பெண் விரும்பினால் அவளுக்குப் புத்திரபாக்கியம் உண்டுபண்ணி ஆதரிக்கவேண்டுமென்று இருக்கிறதென்று சிரத்தானந்தர் தம் கொள்கைக்குப் பலமான சுருதிப் பிரமாணமுமிருக்கென்பதையும் வெளியிட்டிருக்கிறார்.

இதுவும் தவறேயாகும். 'இயம் நாரீ' என்கிற மந்திரத்திற்கு சாயண ஆசாரியார் அவர்களால் செய்யப்பட்டு அச்சிட்டுப்பிரசித்தமாய் வெளிவந்திருக்கும் பாஷ்யத்தை அற்பமாகிலும் இவர் கவனித்திருப்பாராகில் இவ்விதம் விபரீதமான அர்த்தத்தைத் தைரியமாய் கூற முன் வரமாட்டார். அந்த பாஷ்யத்தில் இயம் நாரீ என்கிற மந்திரத்திற்கு, ஹே மனுஷ்யனே மரணத்தையடைந்த உன்னுடைய பிரசித்தமான இந்தப் பத்தினியானவள் பதியான நீ செல்லும் லோகத்தையே அடையவேண்டுமென்றே விருப்பமுடையவளாய் கொண்டு பிரேத ரூபனாயிருக்கிற உனது அருகில் வந்திருக்கிறாள். அவள் அனாதிகாலம் தொடங்கிவரும் சாஸ்திரங்களால் விதிக்கப்பட்டசகலமான ஸ்திரீ தர்மத்தையும் முறையே அனுஷ்டிக்கிறவள் பதிவிரதையான ஸ்திரீகளுக்கு பதியுடன் கூட வசிப்பதே சிறந்த தர்மமாகும். அவ்வித தர்ம சிந்தையையுடைய பத்தினியின் பொருட்டு இந்த லோகத்தில் வசிப்பதற்காக நீ ஆக்ஞை கொடுத்து உன்னுடையதான புத்திரன் முதலான பிரஜைகளையும், மற்றுமுள்ள ஐசுவரியங்களையும் அவள் அடையும்படி உத்திரவு கொடு என்று அர்த்த விவரணம் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வித அர்த்தமுடைய இந்த மந்திரமானது விதவாவிவாகத்திற்கு முக்கிய ஆதாரமென்று ஒருவர் மேற்கோளாக எடுத்துக் காட்டி கர்ஜித்தால் இதுவும் கலியின் ஓர் விலாசம் என்பதைத் தவிர வேறு யாது கூற முடியும்.

2. ருது சாந்தி ஆகாத விதவைக்கும் விவாஹமாகாத கன்னிகைக்கும் வித்தியாஸமில்லையென்று லகுசாதாதப ஸ்மிருதி கூறுகிறதென்றும் வெளியிட்டிருக்கிறார்.

இவ்வசனமும் இவரது கொள்கைக்கு அற்பமேனும் சாதகமில்லை. இவர் கூறியவாறு சாதாதபஸ்ஸமிருதியில் இருப்பது உண்மையே. அது எந்தப்பிரகரணத்தில் எந்தக்காலத்தில் எந்த அதிகாரியை உத்தேசித்துச் சொல்லப்பட்டிருப்பதென்பதை முன்பின் கொஞ்சமும் கவனியாமல் தமது கொள்கைக்குச் சிறந்த மேல்கோள் கிடைத்துவிட்டதென்று இந்த வசனத்தை மாத்திரம் பார்த்து அவசரமாய் வெளியிட்டு விட்டார். அந்த வசனம் தேவரேண சுதோத்பத்தி என்று யுகாந்தரத்தில் வாக்தானம் என்றும் கௌண விவாஹம் ஆன உடனாவது அந்தப்பதிக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அப்பொழுது அவனுடைய சகோதரன் அந்த ஸ்திரீயை விவாஹம் செய்யலாமென்றும் அதுவும் கலியுகத்தில் கிடையாதென்றும் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்மிருதியென்பது எல்லாக் காலத்திற்கும் பொதுவாய் ஏற்பட்டபடியால் யுகாந்தரத்திலுள்ள அனுஷ்டானத்தைச் சாதாதபர் காட்டியிருக்கிறார். அந்தப் பிரகரணத்தில் முன் அவரால் கூறப்பட்ட வசனங்களைக் கவனித்தால் இவ்வித அபிப்பிராயத்துடன்தான் அவர் கூறியிருக்கிறார் என்பது. அறிஞர்களுக்கு நன்கு வெளியாகும். சாதாதபர் கூறியிருக்கும் வசனம் போன்ற வசனங்கள் யாவும் இக்கலிகாலத்தில் அனுஷ்டானத்திற்கு, அருகமில்லையென்று

**ऊढायाः पुनरुद्वाहं ज्येष्ठांशं गोवधं तथा ।**
**कलौ पञ्च न कुर्वीत भ्रातृजायां कमण्डलुम् ॥ व्यासः ।**

விவாகம் ஆன ஸ்திரிக்கு மறுமணம் ஜேஷ்டபாகம் முதலியவை கலியில் கிடையாதுஎன்றும் வியாஸரிஷியும்

**देवराच्च सुतोत्पत्तिर्दत्ता कन्या न दीयते ।**
**न यज्ञे गोवधः कार्यः कलौ नच कमण्डलुः ॥ क्रतुः ॥**

ஸ்திரீகளுக்கு மறு மணம், தேவரனிடத்திலிருந்தும் புத்திரனை உண்டுபண்ணுவது முதலான காரியங்கள் கலியுகத்தில் கூடாது என்று கிரதுவும், மற்றும் சில மஹரிஷிகளும் கலியுகத்தில் ஸ்தி

ரீகளுக்கு மறு மணம் கூடாதென்று நன்கு சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் சாதாதபஸ் ஸ்மிருதியை சிரத்தாநந்தர் பிரமாணமாகக் காட்டியிருப்பது ஸ்மிருதிகளின் தத்துவார்த்தத்தை நன்கு அறியாததே காரணமாகும்.

3. ஆயுர்வேத முறைப்படி 16 வயதிற்குள் பெண்களுக்குச் செய்யும் விவாகம் செல்லலாகாதென்று வரையறுத்துவிட வேண்டுமென்றும் நம் சிரத்தானந்தர் முடிவுரை கூறியிருக்கிறார்.

தர்ம வியவஸ்தையை ஸ்தாபிக்கவேண்டி பல மகரிஷிகள் சிருதிகளின் கருத்திற்கிணங்க விஸ்தாரமாக ஸ்மிருதிகளில் அந்தந்தஜாதிவர்ணாச்ரமங்களுக்குரிய அனுஷ்டிக்கவேண்டியகர்மாக்களை ஸ்பஷ்டமாய் போதித்திருக்கும்பொழுது அவைகளைவிட்டு ஆயுர்வேத சாஸ்திரத்தை தர்மானுஷ்டானத்திற்குப் பிரமாணமாகக் காட்டியிருப்பதைப் பார்க்க மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. ஆயுர்வேதத்திற்கும் தர்ம வியவஸ்தைக்கும் யாது ஸம்பந்தமென இவர் கருதியிருக்கிறாரோ தெரியவில்லை. இது வரையில் ஒரு பண்டிதராலும் அறியப்படாத முறையை பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்து இவ்விதம் சிரமப்பட்டுக் கண்டு பிடித்து வெளியிட்டிருக்கிறார். சாஸ்திர விரோதமான ஏதாகிலுமொருவிஷயத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்கிற ஆக்கிரகம் மேலிட்டால் அந்த சமயம் சாஸ்திரம் அசாஸ்திரம் பிரமாணம் அப்பிரமாணம் பாபம் புண்ணியம் என்கிற இவை யாவையும் சற்றும் கவனியாமல் தமக்குத்தோன்றியவையெல்லாம் பிரமாணமென்று வெளியிட்டு பிறர்களை வஞ்சிப்பது இக்காலத்திலுள்ள பல ஜனங்களுக்கு இயற்கை குணமாக ஆகிவிட்டது.

இவர் செய்யும் காரியம் பூராவும் சாஸ்திரவிரோதமாகவும் ஜனங்களைக் கொடிய பாபத்திற்காளாகும்படி செய்யக் கூடியதாகவுமேயிருக்கின்றது.

இதற்கு முன் பாலக்காடு சென்று அங்குள்ள சில கீழ்ஜாதியிலுள்ளவர்களைமேல் ஜாதிக்கு தூக்கிவிடுகிறோம் என்று கொஞ்சகாலம் தாண்டவமாடினார். அத்தாண்டவத்தை ஒரு மாதிரி பூர்த்தி செய்துவிட்டு தற்காலம் அநாதையானவிதவைகளின் க்ஷேமத்தை உத்தேசித்து மிகவும் பிரயாசைப்படுகிறார். நாம் எடுத்துக்கொண்டிருக்கும் பிரயாசைக்கு யாது பயன் என்பதை இவர்

உற்று நோக்கினால் இவ்வளவு சீக்கிரமாக இவ்வுலகில் கலி விலாசம் பரவாமலிருக்கும். காலத்தின் கொடுமையைத் தடுக்க கீதா சாஸ்திரத்தில் தர்மத்திற்கு கிலானி ஏற்பட்டால் நான் அவதரிக்கிறேன் என்று ஸ்பஷ்டமாய் கூறியுள்ள ஸ்ரீ கிருஷ்ணபகவான் அவதரித்தாலொழிய நம்போன்றவர்களால் சாத்தியமில்லையாகையால் அவ்வித பகவானே கூடிய சீக்கிரம் இவ்வுலகில் தோன்றி அதர்மங்களை அடியோடு விலக்கி சாஸ்திரீய தர்மங்களை நன்கு ஸ்தாபித்து அவரது அடியார்களையும் அன்புடன் பாதுகாத்து ரக்ஷிக்கவேண்டுமென்று அம்மஹானை பல அநேககோடி வந்தனங்களுடன் பிரார்த்தித்து இவ்விஷயத்தையும் இத்துடன் பூர்த்தி செய்து கொள்ளுகின்றேன். சுபம்

உபபத்திராதிபர்.

---

# பஞ்சாயதன விவரணம்.

வைதிக மதஸ்தர்களுக்கு ஸ்நானம் முதலான ஆறு கர்மங்களும் அத்யாவசியமானவையன்றோ?

सन्ध्यास्नानं जपो होमो देवतानां च पूजनम् ।
आतिथ्यं वैश्वदेवं च षट्कर्माणि दिने दिने ॥

மேற்கண்ட கர்மாக்களால் பாபநிவிருத்தி, சித்தசுத்தி, முதலானவையேற்பட்டு, மோக்ஷஹேதுவான ஜ்ஞான உத்பத்தி உண்டாகிறது. எக்கர்மாவாயினும் அதன் கருத்தையறிந்து விதிப்படி அனுஷ்டிப்பதால் விசேஷ சிரேயஸ்ஸும், விபரீதமாய் செய்வதால் உத்தேசித்த பலன் கிடைக்காமற் போவதுடன் கெடுதலான பலமும் சம்பவிக்கிறது. ஆகையால் நாம் செய்யும் ஒவ்வொன்றையும்விசாரித்தும், ஆராய்ந்தும், பெரியோர் ஆசாரத்தை அறிந்தும்நடப்பதே சாலவும் சிறப்பாகும்.

மேற்கண்ட ஆறு கர்மாக்களாவன, முதன் முதல் சந்தியா, இந்த ஸந்தியானுஷ்டானத்திற்கு ஸ்நானம் அங்கமாகையால் வச

ஞாம்பத்தில் "सन्ध्यास्नानम्," என்று ஆரம்பிக்கப்பட்டது. ஸ்நானமும் ஸந்தியானுஷ்டானமும் 1, காயத்ரீஜபம் 2, ஔபாஸநம் 3, ஈசுவரபூஜை, 4 அதிதிபூஜை, 5 வைச்வதேவம், 6.

இவற்றுள் நான்காவதான ஈசுவரபூஜை அவரவர் குலக்கிரமமாய் வந்தபடியாகவும், ஜந்மாந்தர வாசனையை ஒட்டிவந்த மாதிரியாகவும் நடத்தலாம். நமது அத்வைத மதத்தில் இன்ன தேவதையைத் தான் பூஜிக்கவேண்டுமென்று நிர்ப்பந்தமில்லாமையால்

आदित्यमम्बिकां विष्णुं गणनाथं महेश्वरम् ।

என்கிற ஐந்து தேவதைகளில் எதனிடத்தில் இவன் மனப்பற்று ஏற்படுகிறதோ அதை பூஜிப்பதில்

अलिङ्गकपचक्राङ्कपजटास्थ्यसुरामिषम् ।
अरक्ताद्यर्यमनुच्छिष्टं मतमेतद्ध्यत्रास्थितम् ॥

என்றும்ரீதியாய் அவைதிகமான முத்ராதாரணம், வாமமார்க்கமான மாம்ஸாதிகள் இவைகளை நீக்கி ஸாத்வீக உபாஸனை செய்து வந்தால் முக்தியடையலாம்.

ब्रह्महत्याशतं वापि शिवपूजा विनाशयेत् ।

என்னும் வசனத்தால் மஹாபாபங்களின் நிவர்த்தியும்,

शिवपूजां सदा कुर्यात् हेतुः स्वर्गापवर्गयोः ।

என்பதால் ஸகலபோகங்களும், ஸ்வர்க்காதிவாஸமும் மோக்ஷபரியந்தமான பலமும் சொல்லியிருக்கிறது. இவ்விதமான சிவபூஜையை, ஸூர்யன், அம்பிகை, விஷ்ணு, கணபதி முதலான பரிவார தேவதையுடன் சேர்த்தே செய்யவேண்டும். "பரிவாரம்" என்றால் நான்கு புறத்திலும் சூழ்ந்திருத்தல் என்றாயிற்று. அவ்விதம்சூழ்ந்திருப்பது எப்படி? கிழக்கு முதலான திக்குகளில் மத்தியிலுள்ள சிவஸ்வரூபமான பாணத்திற்கு இருக்கிறதா? அன்றேல் ஈசானம் முதலான கோணப்(மூலை) களில் இருக்கிறதா? என்றால் கீழ்க்கண்ட வசனத்தில் அதன் விபரம் கூறியுளது.

शम्भौ मध्यगते हरीनहरभूदेव्यो हरौ शङ्करे
भास्ये नागसुतारवौ हरगणेशाजाम्बिकाः स्थापिताः ।
देव्यां विष्णुहरेभवक्त्ररवयो लम्बोदरेऽजेश्वरे

नाम्ना: शङ्करभागतोऽतिसुखदा व्यस्तास्तु हानिप्रदा: ॥
शङ्करभागत: ईशानकोणादारभ्य प्रदक्षिणमित्यर्थ: ।

(निर्णयसिन्धौ)

1. சிவனை மத்தியில் வைத்துப் பூஜித்தல் சிவபஞ்சாயதனம். இதற்கு விஷ்ணு, ஸூர்யன், கணபதி, அம்பிகை இவர்களை ஈசான கோணம் முதல் முறையே வைத்து அர்ச்சித்தால் இஷ்டசித்திபெறலாம்.

2. விஷ்ணுபஞ்சாயதனம்:— விஷ்ணுவை மத்தியில் வைத்துப் பூஜித்தல்.

இதற்கு சிவன், கணபதி ஸூர்யன், அம்பிகை இவர்களை ஈசானம் முதல் முறையே வழிபடல்

3. ஸூர்யபஞ்சாயதனம்:— சிவன், கணபதி, விஷ்ணு, அம்பிகை இவர்களை முன்பஞ்சாயதனங்கள் போலவே தொழுதல்.

4. அம்பிகாபஞ்சாயதனம்;—விஷ்ணு, சிவன், கணபதி, ஸூர்யன் இவர்கள் முன்போல பரிவாரங்கள்.

5. கணபதிபஞ்சாயதனம்:—ஈசானகோணத்தில் விஷ்ணு, ஆக்னேய கோணத்தில்சிவன், நிருருதிகோணத்தில் ஸூர்யன், வாயுகோணத்தில் அம்பிகை இவர்களுடன் பூஜை செய்ய வேண்டும்.

இவ்வித ஐந்துவித பஞ்சாயதன பூஜையில் எதை வேண்டுமானாலும் செய்தாலும் ஒவ்வொன்றுக்கும் மத்தியிலுள்ள பிரதான தேவதையே முதலில் ஆவாஹனம் முதலாகச் செய்யவேண்டும். எல்லாக்கார்யங்களிலும் விக்னேச்வரரையே முதன் முதலாகப் பூஜிக்கிறோமே என்றுஇங்கும் அவரிடம்செல்லலாகாது. ஆயினும் ஆரம்பத்திலுள்ள "शुक्लाम्बरधरम्" எனும் சுலோகத்தாலேயே அநுசரிதார்த்தமாய்விடுகிறது. குறிப்பிட்ட ஐந்து பஞ்சாயதனங்களில் ஏதேனும் ஒன்றை ஒவ்வொரு ஆஸ்திக நண்பர்களும் அனுஷ்டித்து நன்மை பெறுவது ஸநாதன தர்மஸ்தாபனத்திற்கு இன்றியமையாத லக்ஷணமாகும்.

வி. உமாமகேசுவர சாஸ்திரி,

மகாசாஸ்தேச்வரர் (வாணியர் மண்டபத்தில்)

ஹரிஹர புத்திரராகிய சாஸ்தா பிறந்தவுடன் சிவபெருமானை நோக்கி "உனது திருவருள் பெறுவதற்குரிய தலைமைத் தன்மை எனக்கு வேண்டும்" என்று பிரார்த்திக்க "அது காஞ்சியில் பூஜித்துப் பெறுவாய்" என்று கட்டளையிட அதுபோல் வந்து பூஜிக்கப் பெற்ற பெருமானார்.

அபிராமீச்வரர் (வாணியர் மண்டபத்துக்கு அடுத்த சந்து)

தேவர்கள் வரத்திலும் வன்மையிலும் சிறந்த அசுரர்களிடத்தில் தங்களுக்கு வெற்றியுண்டானமை சிவபெருமானால் என்று உணராது தங்களால் என்றுணர்ந்து பெரும் போரில் தலைப்பட்டு நிற்க. இவர்களது வெற்றித்திறத்தை ஈசானராகியசிவபெருமான் துரும்பொன்று நாட்டி அவர்களது அகங்காரத்தை யொழித்தனர். அஃதொழிந்த பின்னர் உம்மையன்றி எங்களால் ஓரணுவும் அசைக்கமுடியாதென்று யாவரும் கூடிப்பூஜித்தனர்.

ஐராவதேச்வரர் (சச்சபேச்வரர் கோயிலுக்கு ஈசானம்.)

ஐராவதம் என்கிற யானை தேவேந்திரனைத்தாங்கிப்பெருமை பெறப் பூஜித்தது.

கச்சபேச்வரர் திருமால் பாற்கடலில் மந்தரமலையைத் தாங்கக் கச்சப (ஆமை) உருக்கொண்டு காத்த பின்னர் செருக்குற்று கடலைக் கலக்கியகாலத்தில் சிவபெருமான் அவ்வாமையின் செருக்கடக்கி ஓட்டை எடுத்து மதாணிப் பதக்கமாக மார்பிலணிந்து கொள்ளவே, பூர்வஞானம் பிறந்து சிவாபராதம் செய்துவிட்டோமென்றஞ்சி அவ்வபராதம் நீங்கப் பூஜித்தனராதலால் கச்சபேசரெனப் பெயர் பெற்றனர்.

இவரையே பிரமன் கலைமகளோடு வந்து சிருஷ்டித் தொழில் செய்யும் அநுக்கிரகம் பெறப பூஜித்தனன்.

இஷ்டசித்தீச்வரர் (கச்சபேசருக்கு வடக்கில்)

அசுரகுருவாகிய சுக்கிராசாரி வச்சிரயாக்கையும் மிருதசஞ்சீவினியும் பெறப்பூஜித்தனன். இந்த சுக்கிராசாரியினுடைய ஆக்

ஞையினுல் ததீசமுனிவரும் வந்து பூஜித்து வஜ்ர சரீரத்தைப் பெற்றனர். தீர்த்தம் இஷ்டசித்தி தீர்த்தம். இதனுடைய மகிமை இங்கு எழுதமுடியாது. புராணத்திற்காணலாம். இத்தீர்த்தத்தின் வடக்கில் தருமசித்தீச்வரர். கிழக்கில் அர்த்தசித்தீச்வரர். தெற்கில் காமசித்தீச்வரர் .மேற்கில் மோக்ஷசித்தீச்வரர்.

தீர்த்தத்துக்கு கீழ்ப்பக்கத்தில் துர்க்கை சாஸ்தா சூரியன் வைரவர் ஆகிய இந்நால்வர் நடுவில் விநாயகரிருக்கின்றனர். இவர் பஞ்சசந்தி விநாயகர் என்னும் பெயருடையார்.

### ஹரிசாப பயஹேச்வரர் (நெல்லிக்காரத் தெரு)

திருமால் தனக்குப் பிறகு முனிவரால் நேர்ந்த சாபத்துக்கு அஞ்சிச் சிவபெருமானது நிக்கிரகத்தாலும் அனுக்கிரகத்தாலும் போக்கிக்கொள்ள வந்து பூஜித்தனர்.

### மதங்கேச்வரர் (நெல்லிக்காரத் தெருக்கோடி)

மதங்கமுனி என்பவரால் ஐம்புலன்களின் மதமடங்கப் பூஜிக்கப்பட்டவர்.

**திரிகாலக்ஞானேச்வரர்** முக்காலமும் அறிந்துகொள்ளவெண்ணிய பலஞானிகளால் பூஜிக்கப்பட்டவர்.

### † சத்தியநாதேச்வரர் (மதங்கேச்வரருக்குக் கிழக்கு)

சிபி என்கிற இந்திரன் இந்திரபோகத்தை வெறுத்துச் சிவ போகத்தை விரும்பி முக்திபதம் வேண்டிப் பூஜித்தனன். கிருக நிலை பெறுவதற்குப் புதனும் பூஜிக்கப்பட்டவர். தீர்த்தம்— இந்திர தீர்த்தம், இதுவாரதீர்த்தங்களில் புதவார தீர்த்தம். இந்த க்ஷேத்திரம் சத்திய விரதக்ஷேத்திரமெனவும் திருநெறிக்காரைக் காடு எனவும் பெயர் பெறும்.

### சித்தீச்வரர் (குசத்தெருவு)

சிவபாஞ்சுடர் காமாக்ஷி தேவியாரது ஸ்நான தீர்த்தமாகிய மஞ்சள் நீர் நதியில் ஆனந்தக் கூத்தாடிப் பின் சிவலிங்கமூர்த்தி யாயினர். இவர் பல சித்திகள் வேண்டிய பலசித்தர்களால் பூஜிக்கப்பட்டனர்.

## ஆதிபதீச்வரர் (இராஜாம் பேட்டை)

சொன்ன வண்ணஞ் செய்த பெருமாள் பிரமனுடைய யாகத்தை அழித்தற்கு நடுராத்திரியில்வந்த வேகவதி நதியைக் காண்பதற்கு முடியாமல் தான் தீபம் போல் பிரகாசிப்பதற்காகப் பூஜித்த பெருமானுர் அக்காரணத்தால் அப்பெருமாள் விளக்கொளிப் பெருமாளெனப் பெயர் பெற்றனர்.

## பணாதரேச்வரர் (ஆலடிப் பிள்ளையார் கோவில்)

கருடனுக்கஞ்சிய சர்ப்பசிரேஷ்டங்கள் சந்திரசேகாருக்கு நாம் ஆபரணங்களாக ஆவோமாயின் நாம் கருடனைக்கண்டு 'என் கருடா சுகமா' என்று கேட்கலாமன்றோவென எண்ணிப் பூஜித்தன.

காயாரோகணேச்வரர் பிரும்ம விஷ்ணுக்கள் ஒடுங்க வரும் காலங்களில் அவர்களைச் சிவபெருமான் தனது திருமேனியில் ஒடுக்கிக்கொண்டு இவ்விடத்தில் நடனம் செய்து வருகின்றவராதலால் காயாரோகரெனப் பெயர் பெற்றனர். இலக்ஷ்மியினுலும் தேவகுருவினுலும் பூஜிக்கப்பட்டவர்.

திர்த்தம்—லக்ஷ்மி குண்டம் குருவாதீர்த்தம்.

## பிள்ளைபாளையம்.

## பச்சமேச்வரர் § (திருமேற்றளி)

திருமால் சிவசாரூபம் பெற்ற க்ஷேத்திரம்.

ஓதபுரீச்வரர் விஷ்ணுமூர்த்தி தானும் யாவரைப் போலும் பிறந்திருத்தலுக்கு நாணமுற்றுத் தனது விஷ்ணுஸ்வரூபத்தை வெறுத்துப் பிறவாநெறியையளிக்கவல்ல சிவசாரூபத்தையடைய வெண்ணித் திருமேற்றளி என்னும் இவ்விடத்துக்குவந்து வைவச்வதமன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது கலியுகம் வரையில்தவம் செய்திருந்து ஸ்ரீஞானசம்பந்தப் பெருமானுரால் அச்சிவசாரூபத்தைப்பெற்று இலிங்கமூர்த்தியாயினர்.

ஓத்தீச்வரர் ஓதபுரீச்வாரை ஸ்ரீ ஞானசம்பந்தப் பெருமானுர் திருப்பதிகத்தாற்பாடும் பொழுது அப்பதிகத்தைத் தாமும்கேட்க வேண்டுமென்னும் ஆசையினுல் வந்த சிவபெருமான்.

நூற்றுப்பதினெட்டு இலிங்க மூர்த்தங்கள் சிவகணத்தலைவர்களாகிய ஆனந்த ருத்திரர் முதலாகச் சொல்லப்பட்ட 118 ருத்திரர்களால் பூஜிக்கப்பட்டவை.

நூறு இலிங்க மூர்த்தங்கள். அண்டங்களைக் காப்பவர்களாகிய கபாலீசன் முதலிய நூறுருத்திரர்களால் பூஜிக்கப்பட்டவை. அஷ்டவித்தியேச்வர லிங்க மூர்த்தங்கள் அனந்தர் முதலிய அஷ்ட வித்யேச்வரர்களால் பூஜிக்கப்பட்டவை.

மண்டலேச்வரலிங்க மூர்த்தங்கள் குரோதனர் முதலான மண்டலாதிபதிகளால் பூஜிக்கப்பட்டவை.

**2000** தக்ஷபுத்ர லிங்கமூர்த்தங்கள் (கைலாச நாதர் சுற்றிலும்)

மோக்ஷம் விரும்பிய தக்ஷனுடைய பிள்ளைகளால் பூஜிக்கப்பட்டவை.

## மேலைப்பிள்ளைபாளையம்.

### வைரவீச்வரர் (சோணீச்வரர் கோவில்)

வைரவர் சிவநிந்தையையே செய்துகொண்டிருந்த பிரமனது ஐந்தாம் தலையை நகத்தினுற்கிள்ளி அதனைக் கபாலமாகவேந்தி அதில் திருமால் முதலியோருடைய ரக்தபிக்ஷையேற்றுக் காஞ்சிக்கு வந்து பூஜித்தனர். இவருடன் எண்ணப்பட்ட எண்மரும் பூஜித்த லிங்கங்கள் தனித்தனியே உள்ளன.

### விஷ்வக்ஸேனேச்வரர் (ஷை கோயிலுக்குத் தென்பால்)

விஷ்வக்ஸேனன் வைரவரூப மூர்த்தியின் சூலத்திலிருந்த தன்னைத் திருமால் மீட்பித்தனராதலால் அதற்குக் கைம்மாருகத் தக்ஷயாகத்தில் திருமாலிழந்த சக்கரத்தைத்தான் வீரபத்திர மூர்த்தியிடம் பெற்றுக் கொடுக்கப் பூஜித்தனர்.

### தக்ஷேச்வரர் (கச்சியப்பன் தெருவு)

தக்ஷன் வீரபத்திர மூர்த்தியால் தலையற்றுப் பின்னர் மேஷத்தின் தலையைப்பெற்று அவ்வாட்டுக்குரிய ஒலிக்குறிப்போடு ஸ்ரீருத்திரத்தை யுச்சரித்துப் போற்றிக் காஞ்சியில் வந்து பூஜித்துக் கணத்தலைமை எய்தினன்.

வன்மீகநாதேச்வரர் (பலபத்திராமேசுவரருக்கு மேற்கு)

இந்திரன் ஓர் காலத்தில் தேவர்களுக்கெல்லாம் புகழுண்டாக வேண்டுமென்று எண்ணிச்செய்த ஓர் யாகத்தில் புகழுண்டாக, அந்தப்புகழைத் திருமால் அடித்துக்கொண்டுபோய்த் தேவர்களை வஞ்சித்துத் தன்னுடையகோதண்டத்தை யூன்றிஅதன் நுனியில் முகவாய்க்கட்டையை வைத்துக்கொண்டு ஊன்றி நிற்க இந்திரன் கண்டு இவாது தலை அற்றுப்போகும் வகையைத் தேடவேண்டு மென்றெண்ணி இவ்வன்மீகநாதரைப்பூஜித்தனன். இந்த க்ஷேத்திரம் சாலப்பாக்கம் கால்வாய்க்கு வடக்குக் கழனியிலுள்ளது

கைலாசநாதேச்வரர் நாரதேச்வரர் (புத்தேரித் தெருக்கோடி.)

திருமால் பௌத்தாவதாரம் கொண்டு நாரதரோடு திரிபுரத்துக்குச் சென்று அங்குள்ளவர்களுக்குச் சிவபக்தியினம் உண்டாகும்வண்ணம்செய்து பின்னர் அம்மஹாபாபம்நீங்க நாரதரோடும் வந்து பூஜித்தனர்.

† அநேகபதேச்வரர் (கைலாஸநாதருக்குஆக்கினேயம்)

விநாயகரால் பூஜிக்கப்பட்டவர்.

அகஸ்தீச்வரர் (உபநிஷத் பிரும்மசுவாமிகள் மடத்தில்)

அகஸ்திகர் ஏகாம்பரநாதர் ஆலயத்தில்தம திஷ்டசித்தி பூர்த்தியாகும் வண்ணம் பூஜித்து வரும்பொழுது இவ்விடத்தைத் தம திருக்கையாகக் கொண்டிருந்தனராதலால் இவ்விடத்திலும் சிவ லிங்கப் பிரதிஷ்டை செய்து பூஜித்து வந்தனர். அக்காலத்தும் அவ்விடம் ஆச்சிரயமாயிருந்தபடியினுல் இக்காலத்தும் துறவிகளுடைய ஆச்சிரமமாகவேயிருக்கின்றது.

வீரராகவேசுவரர்(ஷிமடத்துக்கு அக்கினிதிக்கில் விலைநிலத்தில்)

ஸ்ரீராமர் இராவணனை வெற்றிகொள்ள அகஸ்திமுனிவரிடத்தில் சிவமந்திரோபதேசம் பெற்றுப் பாசுபத விருதம் பூண்டு பூஜித்தனர்.

கற்கீச்வரர் (வீராகவேச்வரருக்குத் தென்பக்கம்)

விஷ்ணுமூர்த்தி ஹயக்ரீவராய் அவதரித்த காலத்தில் பூஜித்தனர். தீர்த்தம் மிருத்சானுதீர்த்தம்.

பலபத்திரராமேச்வரர் (பிள்ளைபாளையம்)

பலபத்திரர் பாரதயுக்தத்திற்கிருக்கும் மனமில்லாதவராய்த் தீர்த்த யாத்திரையாகப் போனபொழுது சால்வதி தீரத்திலிருந்த முனிவர்களால் காஞ்சிக்ஷேத்திர மகிமை தெரிய வந்து உபமன்னிய முனிவரிடத்தில் சிவதீக்ஷை பெற்றுப் பூஜித்தனர். சாலத்தெரு மேலண்டை வயலில்,

சகோதாதீர்த்தம் (ஒக்கப்பிறந்தான் குளம்)

மாண்டுகன்னீச்வரர் (ஷை குளத்துக்குக் கீழ்பக்கம்)

மாண்டுகன்னி முனிவர் அம்மையில் தேவருலகில் அரம்பையரோடுவாழும் போகத்தை இம்மையில் இப்பிறப்பிற்றானே அவ்வரம்பையரோடு கூடி அனுபவிக்கவேண்டிப் பூஜித்தனர்.

வன்னீச்வரர் (ஷை குளத்துக்குத் தென்கரையில்)

அக்கினிதேவன் தன்னுடைய மூன்று சகோதாரும் தேவர்கட்கிடும் ஆவிகளைத் தாங்கும் வன்மையற்று இறந்துபோகத் தானும் பயந்து சில நாள் சகோதா தீர்த்தத்தில் ஒளித்திருந்து தேவர்களால் வெளிப்பட்டு அவர்கள் வேண்டிக் கொண்டவண்ணம் அவியைத் தாங்கும் வல்லமையைப்பெற பூஜித்தனன்.

இவ்வக்கினி தேவன் தான் ஒளித்திருப்பதற்கு இக்குளத்தருகே வருணனைத் தன்னை யொருவருக்கும் காட்டக்கூடாதென்றும், எனக்கு நீ சகோதானல்லவாவென்றும் பிரார்த்தித்து ஒளித்திருத்தனனாதலால், அக்குளம் சகோதா தீர்த்தமெனப் பெயர் பெற்றது.

சௌனகீச்வரர் சௌனக முனிவர் வேண்டிப் பூஜித்தனர்.

பரசரேச்வரர் (ஆடிசன்பேட்டை)

பராசரமுனிவர் தனது பிதாவாகிய சக்தி என்பவரும் அவருடன் பிறந்த நூற்றுவரும் சுதாசனென்னும் அசுரனால் கொல்

லப்பட்டார்களென்று அறிந்து அசுரகுலத்தை நாசஞ்செய்ய வெண்ணிப் பூஜிக்கப்பெற்ற பெருமானுர்.

முக்தீச்வரர் தம்பிரான் தோழரால் திருக்குறிப்புத்தொண்டர் தம் அடியார்க்கும் அடியேன் என்று போற்றப்பட்ட திருக்குறிப்புத் தொண்டருக்கு முக்தி கொடுத்தவர்.

கருடேச்வரர் (முக்தீச்வரருக்குப் பின்னே யுள்ளவர்)

கருடன் தன் தாய்க்கு சக்களத்தியினுல் நேர்ந்த சிறையை மீட்பதற்காகப் பூஜித்தனர்.

மணிகண்டீச்வரர் தேவாசுரர்கள் தங்களால் சிவபெருமான் விஷமுண்ட அபராதம் நீங்கப் பூஜித்தனர்.

விஷகண்டீச்வரர் (ஷெ மணிகண்டீசாலயத்துள்)

தேவர்கள் சிவபெருமான் தாங்கள் செய்த குற்றத்தை எண்ணுது அமிர்தம் அளித்த கருணையை நாடிப் பூஜித்தனர்.

பணமணீசுவரர் (இவருங்ஷெ ஆலயத்துள்)

வாசுகி தன்னிடத்திலுண்டாகிய விஷத்தைச் சிவபெருமான் புசித்தனரே என்று தனது முடியிலுள்ள மணிகளால் அர்ச்சித்தனன்.

புண்ணியகோடீச்வரர் (பெருமாள்கோயில் ஹனுமந்தராயர் கோயில் சந்து)

வாதராஜமூர்த்தியினுல் பூஜிக்கப்பட்டவர்.

பிரும்மேச்வரர் (புண்ணியகோடீசருக்குக்கிழக்கு)

காப்பதாகிய தொழில் ஒன்றேயிருந்த திருமால் உலகத்தோடு தன்னையும் படைக்கப் பெற்றமை பொருது தானியல்பாக உலகைப்படைப்பதுபோலும் அத்திருமாலேயும் தானே படைக்க வேண்டுமென்று சிவபாஞ்சுடரைப் பிரார்த்திக்க அவர் "காஞ்சியில் பூஜை செய்வையாயின் தருவோம்" என்றுசொல்ல அவ்வண்ணமே வந்து பூஜித்தனர். இந்த க்ஷேத்திரம் சிவாத்தான

மெனவழங்கும். வேகவதி நதிக்குத் தென்பக்கம் தேனம் பாக்கம் என்னும் கிராமம்.

## தும்பவனம்.

ஜைகிஷவ்யேச்வரர். ஜைகிஷவ்யமுனிவர்மோக்ஷசித்தியின் பொருட்டு தும்பைமலரால் பூஜித்தனர். பூஜை நிமித்தமாய்த் தும்பைச்செடியை வனமாக வைத்தனராதலால் தும்பவனமெனப் பெயர்பெற்றது:

வியாஸசாந்தாச்ரயர். வியாசமுனிவர் காசியில் நாராயணரே பரப்பிரும்மமென்றுகூறிய அபராதம் நீங்கப்பூஜித்தனர்.

ஸப்தஸ்தானேச்வரர் (எழுலிங்கமூர்த்திகள்)

சப்தரிஷிகளும் முக்திபதம் வேண்டித் தனித்தனியே தங்கள் தங்கள் பெயரால் பூஜித்தனர்.

பார்க்கவேச்வரர் சுக்ரர் அசுரர்களுக்கு வேண்டிய மாயவித்தைகளில் தான் வல்லவராய்ப் பிரகாசிக்கப் பூஜித்தனர்.

அஷ்டபுஜேச்வரர். அஷ்டபுஜப்பெருமாள் நக்ராசுரன் மூத்திய எண்மர்களை ஏககாலத்தில் கொல்ல எட்டுக்கரங்கள் தனக்குண்டாகப் பூஜித்தனர்.

நரசிம்மேச்வரர். நரசிங்கப்பெருமாள் ஹிரண்யகசிபனைத் தான் கொல்லும் வல்லமையைப்பெறப் பூஜித்தனர்.

சரபேச்வரர், நரசிங்கப்பெருமாள் தனது நரசிங்கச் சட்டையைச் சிவபெருமான் சரபமாய் வந்து கிழித்தருளிய கருணையை நாடிப்பூஜித்தனர்.

வேதநூபுரேச்வரர் † திருமாகரல்,

வேதங்கள் ஓர்கால் சிவபெருமான் ஜகத்ஸம்ஹார ஜயப்பிரதாப நடனம் இத்திரு மாகரலின்கண் செய்யும் காலத்தில் அப்பெருமானது திருப்பாதத்தில் நூபுரமாக விருந்து 'கலீல், கலீல்' என ஒலித்திருக்கப்பெற்று யாவரானும் போற்றப்பெற்ற புண்ணியத்தை நாடிப்பூஜித்தன, சேயாற்றுக்கு வடகரை.